யுத்தக் கலாசாரத்திலிருந்து சமாதான கலாசாரத்தை நோக்கி

S. JOTHILINGAM
B.A (Hons) Po-Sc M A Po-Sc
Dip-in-Int-Af (BCIS) Dip-in-Edu(NIE)
ATTORNEY AT LAW
108/2 Walls Lane Colombo 15
Tel -011-4619140

இலங்கை தேசிய சமாதான பேரவை
12/14, புராண விஹார வீதி.
கொழும்பு - 06.
தொலைபேசி : 94 (01) 2818344 / 2854127

யுத்தக் கலாசாரத்திலிருந்து சமாதான கலாசாரத்தை நோக்கி

"யுத்தங்கள் மனிதர்களின் மனங்களிலிருந்து ஆரம்பிப்பதனால் சமாதானத்துக்கான பாதுகாப்புகளும் அந்த மனிதர்களின் மனங்களிலேயே கட்டியெழுப்பப்படல் வேண்டும்." (யுனெஸ்கோ யாப்பு முகவுரை)

மனிதர்களின் வரலாறு மரணங்களும், அழிவுகளும் மலிந்த யுத்தங்களினால் உருவாக்கப்பட்ட வரலாற்றைக் கொண்டதொன்றாகும். கடந்த 5600 வருட மனித வரலாற்றில் 14,500 யுத்தங்கள் நடைபெற்றுள்ளதாக ஒரு ஆய்வுக்கணிப்பு கூறுகின்றது. கடந்த 3400 வருட வரலாற்றில் 286 வருடங்கள் மட்டும் தான் சமாதானமான வருடங்களாக இருந்தன என மற்றுமொரு ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதிலும் 20ம் நூற்றாண்டு மிகவும் பேரழிவை ஏற்படுத்தியதொன்றாகும். மனித வாழ்வில் மனிதர்களால் மேற்கொள்ளப்பட்ட இரு உலக மகா யுத்தங்கள் உட்பட பல ஆயுத முரண்பாடுகளினால் பல இலட்சக்கணக்கானவர்களின் உயிர்கள் பலிபோயின. இந்த யுத்த அழிவு தான் உலகின் சமாதானத்தை கட்டியெழுப்புவதன் மூலமே இவ்வகையான அழிவுகளிலிருந்து மனித சமூகத்தைப் பாதுகாக்க முடியும் என்ற நிலைப்பாட்டை இரண்டாம் உலக மகா யுத்தத்தை முன் நின்று நடத்திய யுத்த அதிபதிகளுக்கு ஏற்படுத்தியது. இப் புரிந்துணர்வின் விளைவு தான் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உருவாக்கமாகும். ஐக்கிய நாடுகள் அமைப்பை உருவாக்கியவர்கள் தமது இந்த கடமைப்பாட்டை 1945ஆம் ஆண்டு வெளியிட்ட ஐக்கிய நாடுகளின் சாசனத்தில் பின்வருமாறு விளக்கியுள்ளனர். ".... ஐக்கிய நாடுகளின் மக்களாகிய நாங்கள் எதிர்காலத் தலைமுறையினரை யுத்தக் கொடூரங்களிலிருந்து பாதுகாக்க திடசங்கற்பம் கொண்டுள்ளோம்."

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிவடைந்து சில வருடங்களில் யுத்தக் குற்றவாளிகள் தொடர்பான விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம் வெளியிடப்பட்டமையானது யுத்தத்தின் அழிவுகளையும், விபரீதங்களையும் எதிர்காலத்தில் இல்லாதொழிக்கப்பட வேண்டியதன் தேவையை எடுத்துக் காட்டிய ஒரு முக்கிய நிகழ்வாகும். மனிதத்துவத்தின் சமாதானமானதும், நீதியானதுமான கலாசாரத்தை தோற்றுவிக்கும் ஒரு புதிய யுகத்தின் ஆரம்பமாகவே மக்கள் இந்நிகழ்வை இனம் கண்டனர்.

யுத்த நடைமுறைகள் தொடர்பான கட்டுப்பாடுகளை விதிக்கும் சர்வதேச உடன்படிக்கைகளை மீறிய யுத்தக் குற்றவாளிகளை கண்டிப்பது தொடர்பாக இரண்டாவது உலக மகா யுத்தக் குற்றங்கள் பற்றிய நியூரம்பேக் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப்

பிரகடணம், இந்த தண்டனை நடைமுறைகளை பரந்த வரையறைகளுக்கு உட்படுத்தியுள்ளது. அதாவது, சமாதானத்திற்கு ஒரு அவகாசம் கொடுக்கப்பட வேண்டுமானால் யுத்தங்கள் நிறுத்தப்படுவதோ, யுத்தக் குற்றவாளிகள் கண்டிக்கப்படுவதோ போதுமானவையாக அமையாது. ஒவ்வொரு நாட்டிலும் பொருளாதார, சமூக நீதிகள் நிலைநாட்டப்படாத வரையில் நிலையான சமாதானத்தை அடைய முடியாது என்பதில் இந்த மனித உரிமைப் பிரகடனத்தை உருவாக்கியவர்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். இக்கூற்றை முன்னைநாள் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வால்ட் பேச்சு சுதந்திரம், வழிபாட்டுச் சுதந்திரம், பயத்திலிருந்தும், பொருளியல் தேவைகளிலிருந்தும் விடுபடுவதற்கான சுதந்திரம் என நான்கு வகையான சுதந்திரங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் 1945ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் தாபனம் உருவாக்கப்பட்டதன் பின் 220 இலட்சம் மக்கள் பல்வேறு யுத்தங்களினால் கொல்லப்பட்டுள்ளதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் பெருந்தொகையானோர் அப்பாவி பொதுமக்களாவர். இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின் ஒரு நாட்டை மற்றொரு நாடு ஆக்கிரமிக்கும் செயற்பாடு மிகவும் அரிதாகவே நடைபெற்றுள்ளது. ஆனால் இன, மத, மொழி மற்றும் கலாசாரத் தனித்துவங்களையும், வேறுபாடுகளையும் அடிப்படையாகக் கொண்ட முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. இவற்றில் பெரும்பான்மையானவை தனித்துவ அடையாளங்களை அடிப்படையாகக் கொண்ட உள்நாட்டு ஆயுத முரண்பாடுகளாகும். மனித இனத்தின் பரிணாமம், மரபணுக்கள், மிருக நடத்தைகள், மூளை பற்றிய ஆய்வுகள். சமூக மனோதத்துவவியல் போன்ற துறைகள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள மனித இனம் உயிரியல் காரணங்களின் காரணமாக யுத்தத்தையும் வன்முறைகளையும் நாடுவதில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. யுனெஸ்கோவின் சமாதான கலாசாரத்திற்கான சர்வதேச வருட செயற்திட்ட முன்னை நாள பணிப்பாளரான டேவிட் அடம்ஸ் அவருடைய ஆக்கிரமிப்பு முறை என்னும் நூலில் சமாதான நடவடிக்கைகளுக்கும், சமாதானகல்விக்கும் தேவையானதாக கருதப்படும் அநீதிகளை எதிர்த்து நீதிக்காக செயற்படும் ஆற்றலை மனிதர்களின் மரபணுக்களின் ஆதிக்கம் வழங்குகின்றது என்னும் முடிவிற்கு வந்துள்ளார். யுத்தம் என்பது மரபணுக்கள்ல் இல்லையே ஆனால் மனித இனத்திற்க யுத்சம் எங்கிருந்து வந்துள்ளது? ஏன் மனித வரலாறு முழுவதும் யுத்தங்கள் நிறைந்ததாக அமைந்துள்ளன? போன்ற வினாக்கள் எழுகின்றன. அதற்கான பதில் எமது கலாசாரமாகும். வரலாற்று ரீதியாக மனித இனம் யுத்தத்தையும, வன்செயல்களையும் ஆாவபடுத்துவதற்கும் இடமளிப்பதற்குமான கலாசாரமான யுத்தக் கலாசாரத்தை அபிவிருத்தி செய்து வந்துள்ளது.

யுத்தத்தை செய்வதற்கு தேவையானவை என்ன? இனம் காணப்பட்ட பகைவர்கள், ஆயுதங்கள், அரசுகளின் அல்லது அதிகாரிகளின் கட்டளைகளை ஏற்று நடக்கின்ற மக்கள், வன்முறைகளின் மூலம் அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை தகவல்களைக் கட்டுப்படுத்தும் அரசுகளும் ஊடகத்துறைகளுமாகும். இவற்றை

விட இனத்துவ அடையாளங்களைக் கொண்ட முரண்பாடுகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணியாக அமைவது இனவாதமாகும். இப்புவியில் வாழும் எல்லா சமூகங்களுக்கிடையிலும் இனவாதம் காணப்படுகின்றது.

இனவாதம் என்பது மனித உறவுகளை மறுக்கின்ற கோட்பாடாகும். எனினும் சமூகத்தில் நிலவும் இவ் இனவாதம் என்பது பலருக்கு தென்படாததொன்றாகவோ அல்லது உணரப்படாததொன்றாகவோ தான் இருக்கின்றது. இனவாதம் வன்முறை வடிவம் பெறும் போது தான் பொதுவாக உணரப்படுகின்றது. இனவாதத்தினால் பாதிக்கப்படாதவர்களால் அதன் பாரதூரமான விளைவுகளை புரிந்துக்கொள்ள முடிவதில்லை.

இனவாதம் என்பது மூன்று கூறுகளைக் கொண்டது. முதலாவது சமூகம் வேறுபட்ட இனக்குழுக்களைக் கொண்டது எனும் நிலைப்பாடு, இரண்டாவது இக்குழுக்கள் இயற்கையாகவே சமத்துவமற்றவை என்பதோடு உயர்வு, தாழ்வுகளைக் கொண்டவை என்னும் நம்பிக்கை, மூன்றாவது இப்பாகுபாட்டு சிந்தனையை அரசியல் கொள்கைகளாகவும், அரசியல் செயற்திட்டங்களாகவும் அரசியல் அதிகாரத்தின் துணையுடன் வடிவம் கொடுக்க தந்திரமாக செயற்படல். மேற்கூறிய காரணிகள் மூன்றும் ஒன்று சேர்ந்து செயற்படும் போது இனவாதம் அதன் அரசியல் வடிவத்தை பெற்று இனமுரண்பாட்டுக்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்கின்றது.

இலங்கையில் இன்று நிலவும் யுத்தத்தின் அடிப்படை காரணிகளாக மேலே குறிப்பிடப்பட்ட எல்லாக் காரணிகளையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இவற்றில் ஏதாவது ஒரு காரணி இல்லாமலிருந்திருந்தால் இலங்கையின் இனமுரண்பாடு இத்தகைய பேரழிவான யுத்தமாக உருவாவது தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

எனவே மரணத்தையும், அழிவுகளையும் விளைவிப்பதற்கு வழிவகுக்கும் யுத்தக் கலாசாரத்தை இல்லாதொழித்து ஒவ்வொரு நபரினதும், குழுவினதும் கௌரவம் நிலைநாட்டக் கூடிய வகையில் தனித்துவ வேறுபாடுகளுக்குப் பாதுகாப்பான உலகைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான சமாதானக் கலாசாரத்தை கட்டியெழுப்புவது தான் 21ஆம் நூற்றாண்டில் சாதாரண பொது மக்களாகிய எம்முன்னுள்ள பிரதான சவாலாகும்.

சமாதான கலாசாரம் என்றால் என்ன?

சமாதான கலாசார கோட்பாடு என்பது சமாதானத்தினதும், அகிம்சையினதும் விழுமியங்களின் அங்கீகாரத்தின் மீதும் சர்வதேச மனித உரிமைச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள மனித உரிமைகள், மனிதாபிமான உரிமைகள். சுதந்திரம் என்பவை

ஒவ்வொரு பிரஜையும் பாகுபாடு இல்லாமல் அனுபவிக்க கூடிய உத்தரவாதத்தின் மீதும் கட்டியெழுப்பப்பட வேண்டிய ஒன்றாகும்.

முரண்பாடுகளோ அல்லது வன்முறைகளோ அற்ற சூழல் சமாதான கலாசாரத்தை கொண்டதாக கருத முடியாது. சமூகத்தில் ஏற்படுகின்ற முரண்பாடுகள் எல்லாவற்றையும் அகிம்சை வழிமுறைகளில் இணக்கப்பாட்டுடன் தீர்த்துக் கொள்ளும் நம்பிக்கையையும், கடமைப்பாட்டையும் உத்தரவாதம் செய்வதோடு முரண்பாடுகளின் தீர்வுக்கு வன்முறை பிரயோகத்தை தவிர்க்கக் கூடிய சூழலே சமாதான கலாசாரமாக கருதப்படும்.

இச்சமாதான கலாசாரமானது வெறுமனே ஓர் அறிவியல் ரீதியான கோட்பாடல்ல. அது வாழ்க்கையின் வழிகாட்டி. வாழ்க்கை பற்றிய தாற்பரியங்களாகும். சமாதானக் கலாசாரமானது எதிர்காலம் பற்றிய தரிசனமும் நடைமுறையாகிய இரண்டுடனும் தொடர்புடையதாகும்.

சமாதானக் கலாசாரமானது யுத்தத்தையும், யுத்த கலாசாரத்தையும் இல்லாதொழிக்கக் கூடிய பரந்த மக்கள் இயக்கங்களோடு தொடர்புபட்ட மக்களின் முழுமையான பங்குபற்றுதலுடன் கட்டியெழுப்பப்பட வேண்டிய ஒன்றாகும்.

யுத்த கலாசாரமானது இனங் காணப்பட்ட எதிரிக்கு எதிராக மக்களை ஒன்றிணைப்பதற்கான எதிர்ப்புணர்வின் மீதான தோழமை. அழிவுகளை விளைவிப்பதற்கான துணிவு போன்ற உணர்வுகளை மக்கள் மனதில் உருவாக்குவதன் மூலம் வளர்த்தெடுக்கப்படுகின்றது. அது துப்பாக்கி முனையிலோ அல்லது பலவந்தமாகவோ மற்றவர்களின் மீது திணிக்கப்படுகின்ற ஒன்றாகும்.

சமாதான கலாசாரத்திற்கான சக்தி துப்பாக்கி முனையில் வளர்த்தெடுக்கப்படவோ அல்லது மற்றவர்களினால் பலவந்தமாக திணிக்கவோ கூடிய ஒன்றல்ல. ஜனநாயகம், அபிவிருத்தி, சமாதானம் ஆகிய மூன்றினதும் ஒருங்கிணைந்த 'முன்முனை ஈடுபாடுகளின் மூலம் சமாதான கலாசாரத்துக்கான சக்தி உருவாக்கப்படுகின்றது. மக்களின் சுதந்திரமான பங்குபற்றுதல், சுதந்திரமான கருத்தாடல் மூலம் பெறப்படுகின்ற புரிந்துணர்வு, ஒத்துழைப்பு, தோழமை, பங்குபற்றல் போன்றவற்றின் மூலம் உருவாக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

அஹிம்சை வழிமுறைகளில் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான பயிற்சியும் ஜனநாயக மரபுகளையும் நடைமுறைகளையும் கௌரவித்து நடத்தலும், சட்டத்தின் மீதான ஆட்சியும் சமாதானக் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படைத் திறவுகோல்களாகும்.

சமாதானத்திற்கான சவால்கள் பல கோணங்களிலிருந்து விடுக்கப்படுகின்றன. மனித

உரிமைகள், நீதி, சட்டரீதியான ஆட்சி, கலாசாரத் தனித்துவங்கள் போன்றவை கௌரவிக்கப்படாமை, வறுமை, அறியாமை போன்ற நிலமைகளின் அதிகரிப்பு ஆகியவை முக்கியமானவையாகும். சமாதானக் கலாசாரம் என்பது இவ்வகையான சவால்களுக்கான பதிலாக அமையும். இவற்றுக்கான தீர்வுகள் வெளியிலிருந்து திணிக்கப்பட முடியாதென்பதோடு, அவை சமூகத்தினுள்ளிருந்து பெறப்பட்டு தீர்க்கப்பட வேண்டியவைகளாகும். நாட்டின் நிலைமைகள் தொடர்பாக தெளிவானதும், உண்மையானதுமான. தகவல்கள் கிடைக்கப் பெறுவது சமாதானக் கலாசாரத்தை அபிவிருத்திச் செய்வதற்குத் தவிர்க்க முடியாததொன்றாகும். சமூகத்தின் நடையுடை பாவனைகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதில் தொடர்பூடகங்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. கருத்துக்களுக்கும், தகவல்களுக்குமான சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் தொடர்பூடகங்கள் மிகவும் தீர்க்கமான பங்கை வகித்தல் வேண்டும். தொடர்பூடகங்களின் சுதந்திரத்திற்கான சூழ்நிலைகளை உருவாக்குவது ஜனநாயகத்தையும், சமாதானத்தையும் நிலைநாட்டும் பணியில் மிகவும் முக்கியமானதாகும். அதேவேளை தொடர்பூடகங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளும் சமமான முக்கியத்துவம் கொண்டதாகும்.

சமாதான கலாசாரம் என்பதை ஐ.நா. பொதுச்சபை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றது "....... வன்செயல்களைத் தவிர்ப்பதற்குத் தேவையான வகையில் கலந்துரையாடல்கள், பேச்சுவார்த்தைகள் மூலம் முரண்பாடுகளின் மூலக்காரணிகளை இல்லாதொழிப்பதன் மூலம் அம்முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துதல், அத்தோடு எல்லா மனித உரிமைகளையும் பூரணமாக அனுபவிப்பதை உத்தரவாதப்படுத்துவதன் மூலம் தமது சமூகத்தில் அபிவிருத்தி நடைமுறைகளில் முழுமையாக பங்குபற்றுதலுக்கான சூழலை உத்தரவாதப்படுத்துகின்ற சுதந்திரம், நீதி, ஜனநாயகம் எல்லா மனித உரிமைகள், சகிப்புத்தன்மை, பங்குபற்றுதல் போன்ற கொள்கைகளின் அடிப்படையில் சமூகங்களுக்கிடையில் ஏற்படுத்தப்படும் பரஸ்பர செயற்பாடு, பகிர்ந்துக் கொள்ளல் போன்றவற்றை பிரதிபலிக்கவும். தூண்டுவதற்குமான மனித விழுமியங்கள், மனோநிலை, நடத்தைகள், சமாதான கலாச்சாரம் எனப்படும்."

சமாதானக் கலாசாரத்திற்கான செயற்திட்டம் பற்றிய ஐ.நாவின் பிரகடனத்துடன் (A/RES/52/13) தொடர்புபட்டதும் உலகெங்கிலுமுள்ள தனி நபர்கள், குழுக்கள், அமைப்புகள், நிறுவகங்களின் செயற்பாடுகளின் ஆர்வத்தை ஏற்படுத்துவதுமே சமாதானக் கலாசாரத்திற்கான கோட்பாடாகும். சமாதானக் கலாசாரம் தொடர்பான உலக இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காக ஐ.நா. செயற்திட்டம் பின்வரும் நடைமுறைகளை முன்வைத்துள்ளது.

* கல்வியின் மூலம் சமாதானக் கலாசாரத்தை வளர்த்தல்.
* தங்குதிறன் கொண்ட சமூக, பொருளாதார அபிவிருத்தியை வளர்த்தல்
* எல்லா மனித உரிமைகளுக்கான கௌரவத்தை அபிவிருத்தி செய்தல்

* ஆண், பெண் இருபாலருக்குமிடையில் சமத்துவத்தை உறுதி செய்தல்
* ஜனநாயக பங்குபற்றுதலை வளர்த்தல்
* புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை, தோழமை போன்றவற்றை அபிவிருத்தியடைச் செய்தல்
* பங்குபற்றுதலுடனான தொடர்பாடலையும், தகவல் மற்றும் அறிவு போன்றவற்றின் சுதந்திரமான பரிமாற்றத்தையும் ஆதரித்தல்.
* சர்வதேச சமாதானத்தையும், பாதுகாப்பையும் வளர்த்தல்

ஐ.நா. சபையால் 2000ம் ஆண்டு சமாதான கலாசாரத்துக்கான ஆண்டாகப் பிரகடணப்படுத்தப்பட்டது. அத்தோடு 2001 முதல் 2010 வரையிலான தசாப்தம் சிறுவர்களின் வன்முறைகளற்ற சமாதான கலாசாரத் தசாப்தமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

வன்முறைகளற்றதும், சமாதான கலாசாரத்தைக் கொண்டதுமான உலக இயக்கத்தை கட்டியெழுப்புவதில் ஒவ்வொரு பிரசையும் தமது அன்றாட வாழ்விலும், தமது குடும்பத்திலும், தொழிற் தளத்திலும், சமூகத்திலும், நாட்டிலும், பிராந்தியத்திலும் பின்வரும் கடமைப்பாட்டை நிறைவேற்றுவதன் மூலம் சமாதான கலாசாரத்தை உருவாக்குவதற்கு பங்களிப்பு செய்ய முடியும் என 2000 வருட சமாதான ஆண்டிற்கான "சமாதான விஞ்ஞாபனம்" குறிப்பிடுகின்றது.

1. எல்லோரினதும் மான்பை கௌரவித்து நடத்தல்
2. அகிம்சை வழிமுறைகளைப் பின்பற்றல்
3. நீதியை நிலைநாட்டும் செயற்பாட்டிற்கு தமது நேரத்தையும், வளங்களையும் பகிர்ந்து கொள்ளல்
4. கருத்துக்களை வெளியிடும் சுதந்திரத்தையும், கலாசார பன்முகப்பாங்கையும் பாதுகாத்தல்
5. சாதகமானதும், பொறுப்புள்ளதுமான நுகர்வோர் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல்
6. சமூக அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல்

சமாதானம் தொடர்பாக மக்கள் எதிர்நோக்கும் மிகவும் சிக்கலானதும், ஒன்றுடன் ஒன்று பிணையப்பட்டுளன்ளதுமான வறுமை, ஓரம் கட்டுதல், அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான வெளியேற்றம், இனக்குழுக்களுக்கிடையான முரண்பாடு, இனவாதம் பரப்பப்படுதல், சமூக வன்செயல்கள், உலகமயப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தின் விளைவாக ஏற்படுத்தப்படும் ஏழை, செல்வந்தர்களுக்கிடையிலான இடைவெளி, பாரிய மனித உரிமைமீறல்கள், சுற்றுச்சூழல் சீரழிவு போன்ற பிரச்சினைகளை கையாள்வதற்குத் தேவையான ஆற்றல்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு சமாதானக் கல்வி இன்றியமையாததொன்றாகும்.

சமாதானக் கல்வி என்பது நாம் சிந்திக்கின்ற தன்மையை மாற்றுவதோடு சமாதானம், நீதி போன்றவற்றுக்கான கற்கைகளை ஊக்குவிக்கின்ற ஒரு பங்குபற்றுதலுடனான நடைமுறையாகும். சமாதானத்தை உருவாக்குவதற்கும், பாதுகாப்பதற்கும் மக்களுக்கு ஆற்றல்கள் தேவை. அவர்களுக்குத் தேவையான சமாதானக் கல்வியானது மனித உரிமைகள், அபிவிருத்தி, ஜனநாயகம், சுற்றுச்சூழல் போன்ற கல்விகளையும் உள்ளடக்கும். மனித பாதுகாப்பு, ஆயுதத் தவிர்ப்பு பற்றிய விடயங்கள், இணக்கப்பாடு, முரண்பாட்டு தவிர்ப்பு / தீர்வு தொடர்பான பயிற்சி, தொடர்பூடகம் பற்றிய விமர்சன ரீதியானப் புரிந்துணர்வு, ஆண், பெண், இருபாலர் கற்கைகள், அஹிம்சை, சர்வதேச உறவுகள் போன்றவை எல்லாம் சமாதான கல்வியின் அங்கங்களாகும். 21ஆம் நூற்றாண்டில் சமாதானத்துக்கும், நீதிக்குமான ஹேக் கோரிக்கை சமாதான கல்வியைப் பற்றி பின்வருமாறு விளக்கியுள்ளது.

''உலகப் பிரச்சினைகள் பற்றிய புரிந்துணர்வையும், முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்கான ஆற்றலையும், அகிம்சை ரீதியில் நீதிக்காக போராடும் ஆற்றலையும், சர்வதேச தராதரத்திற்கு அமைய மனித உரிமைகளுடனும் , சமத்துவத்துடனும் வாழவும் கலசார வேறுபாடுகளை ஏற்றுக்கொண்டு திருப்திபடவும், புவியையும், இப்புவியில் வாழும் ஒவ்வொருவரையும் கௌரவிக்கவும் ஆரம்பித்து விட்டால் சமாதான கலாசாரத்தை அடைந்து விடலாம். இத்தகைய புரிந்துணர்வையும், ஆற்றல்களையும் திட்டமிட்ட சமாதானக் கல்வியின் மூலமே அடைய முடியும்"

யுத்த கலாசாரம்	சமாதான கலாசாரம்
பலாத்காரத்தின் மூலமான அதிகாரவாத ஆட்சி	சட்டத்தின் மீதான ஆட்சி
வன்முறைகளையும், பயங்கரவாதத்தையும், பயமுறுத்தல்களையும் பயன்படுத்துதல்	சகிப்புத்தன்மையும், கருத்தாடலையும் பயன்படுத்துதல்.
ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துதல்	ஒத்துழைப்பை நியாயப்படுத்துதல்
இராணுவவாதம்	அகிம்சை வழிகளைப் பயன்படுத்துதல்
மனித உரிமை மீறல்கள்	மனித உரிமைகளை கௌரவித்தல்
ஜனநாயக விரோதமான முறையில் தீர்மானித்தல்	ஜனநாயக, பங்குபற்றுதலுடனான தீர்மானமெடுத்தல்
பால்நிலைச் சமத்துவம் தொடர்பான அவதானமின்மை	பால்நிலைச் சமத்துவம் தொடர்பான புரிந்துணர்வும், அவதானமும்
மக்களையும், சுற்றுச்சூழலையும் சுரண்டுதல்	தங்குதிறன் கொண்ட மனித அபிவிருத்தி